‘தினத் தந்தி’யின் ஜகஜர்லப் புரட்டு!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் : அண்ணாதுரை

The “Nam Nadu” : A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ் : ஒரு அணா | சென்னை : ஆனிமீ 15உ செவ்வாய் (29—6—54) | மலர் : 2
இலங்கையில் 10 சதம் | வெளியூர் : ஆனிமீ 16உ புதன் (30—6—54) | இதழ் : 13

தூத்துக்குடி சதி வழக்கு

தி. மு. கழகத் தோழர்கள் மீது தொடரப்பட்டுள்ள தூத்துக்குடி சதி வழக்கின் செஷன்ஸ் விசாரணை ஆகஸ்டு 30-ந் தேதியன்று நெல்லையில் ஆரம்பமாகும் என்று தெரிகிறது.

பொய்ப் பிரசாரம்!

இந்தியத் துருப்புகள் காஷ்மீர் எல்லையில் குவிக்கப்படுகின்றன என்று பாகிஸ்தான் பத்திரிகைகளில் வெளியான செய்திகள் விஷமத்தனமான பொய் என்று ஸ்ரீநகரில் உள்ள இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர்.

பேச்சைத் திரித்து எழுதும் ‘தினத் தந்தி’யின் திருகு ஜாலம்!

இராஜேந்திரன் பேசினது ஒன்று; வெளியிட்டதோ வேறு ஒன்று!

‘மக்கள் பத்திரிகை’யின் பண்பு இதுதான் போலும்!

தோழர்கள் மு. கருணாநிதி, எஸ். எஸ். ராஜேந்திரன் தஞ்சை மாவட்டச் சுற்றுப் பிரயாணத்தின்போது, துவரங்குறிச்சியில், தோழர் ராஜேந்திரன் அவர்கள், “அண்ணா அனுமதி கொடுத்தால் நேருவின் தலையில் கல்லை ஏற்றி, ‘கல்லக்குடி’ என்று பெயர்ப் பலகை எழுதித் தூண் நாட்டுவோம்” என்று பேசினதாகத் ‘தினத் தந்தி’யில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

உண்மையிலேயே தோழர் ராஜேந்திரன் அன்று பேசினது, “நேரு தென்னாட்டவரைப் பார்த்து முட்டாள்கள் என்று கூறினார்; முன்னொரு சமயம் வடநாட்டுக் கனக விசயன் தலையில் கல்லேற்றி, கண்ணகி கோயில் கட்டிய தென்னாட்டு சேரன்-செங்குட்டுவன் பரம்பரையைச் சார்ந்தவர்கள் நாம்; கல் சுமந்த வடநாட்டுக் கனக விசயன் பரம்பரையைச் சார்ந்தவர் நேரு,” என்றுதான் பேசினார். அதைத் திருத்தியும், மிகைபடவும் ‘தினத் தந்தி’ பிரசுரித்திருக்கிறது. —(ந. நி.)

குருவிக்கரம்பையில் பிள்ளையார் கோயிலே இல்லை

கோயில் திறப்புக்கு அண்ணாதுரையை சம்பந்தப்படுத்தியது வெறும் அபத்தம்

சில காங்கிரசார் எதிர்த்தனர் என்பதும் பித்தலாட்டம்!

24—6—54-ந் தேதி ‘தினத் தந்தி’யில், அதிராம்பட்டினத்திற்குச் சமீபத்திலுள்ள குருவிக்கரம்பையில் புதிய பிள்ளையார் கோவில் ஒன்றைத் திறப்பதற்கு அண்ணாதுரையை அழைப்பதென கோவில் நிர்வாகஸ்தர்கள் தீர்மானித்ததாகவும், அதைக் காங்கிரஸ்காரர்கள் எதிர்த்ததாகவும், மெஜாரிட்டி மெம்பர்கள் ஏகோபித்த முடிவுப்படி அண்ணாதுரையை அழைக்கும் முடிவு வெற்றி பெற்றுவிட்டதாகவும் முதலிடம் கொடுத்துப் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

உண்மையிலேயே எங்களூரில் (குருவிக்கரம்பையில்) புதிய பிள்ளையார் கோயிலும் இல்லை; பழைய பிள்ளையார் கோயிலும் இல்லை. இது சம்பந்தமாக குருவிக்கரம்பையிலுள்ள மாகாண காங்கிரஸ் கமிட்டி மெம்பர் திரு ஏ. வயிரவன் சேர்வை முதல், பல காங்கிரஸ் முக்கியஸ்தர்கள்வரை கேட்டதற்கு, “இந்த அவதூறுக்குக் காங்கிரஸ்காரர்கள் பொறுப்பல்ல; இதிலிருந்து ‘தினத் தந்தி’ செய்தி முற்றிலும் இப்படித்தானிருக்கும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்,” என்றனர். —(ந. நி.)

‘எதிர்ப்புக்கு அஞ்சா வீரமும், எதிரியை மன்னிக்கும் ஈரமும் கொண்டவர் நாம்’

—(:)—

‘உத்தமன் சாக்ரடீசை நினைக்கும் நேரத்திலா சரியப் போகும் ராமசாமிகளை நினைப்பது?’

—:O:—

‘திராவிடத்தை பிரிக்காமல் சாகமாட்டோம்!’

‘எடுத்த காரியத்தை முடிக்காமல் தூங்க மாட்டோம்!’

வேலூர் மாநாட்டில் பொதுச்செயலாளர்

(நமது தனி நிருபர்)

“நாம் தியாக உள்ளம் கொண்ட பரம்பரையினர்; எடுத்த காரியத்தை முடிக்காமல் தூங்கமாட்டோம்; திராவிடத்தைப் பிரிக்காமல் சாகமாட்டோம்! எல்லாத் துறையிலும் விடுதலை கோரி நிற்கும் தியாக உள்ளம் கொண்ட நாம், நெஞ்சிலே, எதிர்ப்புகளுக்கு அஞ்சா வீரமும், எதிரியையும் மன்னிக்கும் ஈரமும் கொண்டவர்களாயிருக்கிறோம்!”—என்று, பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள், வேலூரில் 27—6—54-ல் நடைபெற்ற அரசியல் மாநாட்டில் குறிப்பிட்டபோது, குழுமியிருந்த கழகத் தோழர்களிடையே ஒரு பரபரப்பு தோன்றியது! ஆர்வத்தின் பெருமூச்சு அவர்களிடையே எழுந்து நின்றது!

வடநாட்டைத் தட்டிக் கேட்க, சட்ட சபையில் இப்போதுள்ள எதிர்க் கட்சிகளால் ஏன் இயலாது—என்பதற்கான காரணங்களை அவர் விளக்குகையில், “பழக் கடையில் ஒரு கூடையில் இருக்கும் பல ரக மாம்பழங்களில், சில இனிக்கும்; பல புளிக்கும்; மற்றுஞ் சில நாருக இருக்கும்; இதனையொத்த நிலையில் இவர்களிருக்குமட்டும் வடநாட்டை எப்படித் தட்டிக் கேட்க முடியும்?”—என்று குறிப்பிட்டபோது, மாநாட்டில் குழுமியிருந்த தோழர்கள், சிந்தனைக்கு விருந்தாக அக்கருத்தினை மேற்கொண்டனர்.

“கடந்த ஐந்தாண்டு காலமாக நன்னந் தனியாக நடந்து வந்திருக்கிறோம்; கடைபிடித்த கொள்கையைக் கைவிட்டோமில்லை; இலட்சியத்தைக் காட்டிக்கொடுத்தோமில்லை; மாற்றார் மனம் பொறாமைப்படும் அளவுக்கு, பெரியார் மனம் பெருமைப்படும் அளவுக்கு நமது விடுதலைப் பயணம் நடைபெற்று வருகிறது... கற்ற பாடத்தையும், கற்றுத்தந்த குருவையும் மறக்காதீர் தோழர்களே!”

என்று, வள்ளாயிரவர் திரண்டிருந்த அம்மாநாட்டில் பொதுச்செயலாளர் முழங்கினார். அவரது பேச்சின் முற்பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது; பிற்பகுதி கீழே தரப்பட்டுள்ளது:—

“நஞ்சுண்டு செத்தாலும் சாவேன் — உண்மையைச் சொல்லியே தீருவேன்,” என்று உண்மைக்காக உயிரை விட்ட உத்தமன் சாக்ரடீசைப் பற்றி நினைக்கிற நேரத்திலா, சரியப்போகும் ராமசாமிகளை நினைப்பது?

ஆப்ரகாம் லிங்கனையும், வாஷிங்டனையும் பற்றிப் பாடம் படிக்கும் நேரத்திலா மந்திரி வேலை தேடி ஓடும் உலுத்தர்களைப் பற்றிப் பேசுவது? — கூடாது தோழர்களே, கூடாது!

“ராமசாமிப் படையாச்சி, உங்களை எல்லாம் ஒழித்து விடுவதாகப் பேசுகிறாரே; இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?” என்று சென்னையிலிருந்து வந்த ‘தினத் தந்தி’ நிருபர் என்னைக் கேட்டார். என்ன நினைப்பது அவரைப் பற்றி? ‘ஒழித்து விடுவேன்’ என்பவர், முடிந்தால் செய்யட்டும்!

நாம் தியாக உள்ளம் கொண்ட பரம்பரையினர்! நாம் எடுத்த காரியத்தை முடிக்காமல் தூங்கமாட்டோம்! திராவிடத்தைப் பிரிக்காமல் சாகமாட்டோம்!

அமெரிக்காவிலே, பிரான்சிலே, பாகிஸ்தானிலே இங்கெல்லாம் நடைபெற்ற விடுதலைப் போர், அன்னிய ஆதிக்க விடுதலைக்காக மட்டும்தான்; ஆனால், நாம் கோரும் விடுதலையோ, சமூக விடுதலை—‘எல்லாம், எல்லாருக்கும்’ ஆகும் நிலைக்காக பொருளாதார விடுதலை—நம்மை நாமே ஆண்டு கொள்ளும் அரசியல் விடுதலை—இப்படி எல்லாத் துறையிலும் விடுதலை கோரி நிற்கும் நிரம்பத் தியாக உள்ளம் கொண்ட நாம், நெஞ்சிலே, எதிர்ப்புகளுக்கு அஞ்சா வீரமும், எதிரியையும் மன்னிக்கும் ஈரமும் கொண்டவர்களாயிருக்கிறோம்!

“நான், தாறுமாறுகச் செல்லும் நல்ல குதிரையில் செல்வதைக் காட்டிலும், நேராகச் செல்லும் கழுதையில் செல்வதையே விரும்புகிறேன்” என்று, “காங்கிரசிலிருந்து ஏன் விலகினீர்கள்?” என்று கேட்டபோது, திருவாரூர் சொன்னது போல், நாம், அந்தத் தாறுமாறான குதிரையை ஓட்டிச் செல்லும் பண்டித நேருவையும் எதிர்க்கிற நிலையில் இருக்கிறோம்.

நமக்கு நல்ல பாதையே இல்லையே, நடந்து செல்ல! நமது விடுதலைப் பயணத்தைத் தொடர்ந்து நடத்த நாம் பாதை அமைக்கும்போது, தானும் வந்து, “கடப்பாறையைத் தா! நானும் பாதை போட என்னாலானதைச் செய்கிறேன்” என்று கூறி அன்று நம்மோடு வந்த பழைய பாச்சியார்களின் இன்றைய புதிய போக்குகளையும் நாம் சமாளிக்க வேண்டியிருக்கிறதே!

. நமது வேலை மிகச் சிரமமானது தோழர்களே!—மிகச் சிரமமானது!

நாம், நமது இலட்சியமான ‘திராவிட நாடு, திராவிடருக்கே’ என்பதை, அடிக்கடி தொடர்ந்து மாநாடுகளிலும், கூட்டங்களிலும் சொல்லிவருவது இலட்சியத்தில் அழுத்தமிருப்பதால் இல்லை; “வடநாட்டான் ஒட்டிக் கொண்டிருப்பதால் என்ன இலாபம்; சொல்வார்களா?” என்று ஆயிரம் முறை கேட்டிருக்கிறோம்—பதில் சொல்லியதுண்டா காங்கிரஸ் நண்பர்கள்? இனியாவது சொல்ல முன்வருவார்களா? அவர்கள் பதில் சொல்லுகிற வரையில் நாம் கேட்டுத்தானே ஆக வேண்டும்?

நாம், நம்முடைய இலட்சியத்தை அடைவதற்காக, எத்

([illegible] பக்கம் பார்க்க)

நம் நாடு

திராவிட முன்னேற்றக் கழக நாளிதழ்

சென்னை 29—6—54 செவ்வாய்

ஜூலை 20-ந் தேதிக்குள்!

• இந்தோ-சீனா சிக்கலில் ஒரு முடிவு காண்பதற்காகக் கூடிய ஜெனிவா மாநாடு வீண்போக வில்லை. நவசீனப் பிரதமரின் ஆலோசனைப்படி, இந்தோ-சீனப் போரை உடனடியாக நிறுத்துவதற்கு ஏற்பாடு துரிதமாக மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

பிரெஞ்சுப் பிரதமராக இருந்த லேனியல் அமைச்சர் குழு கவிழ்க்கப்பட்டவுடன், புதிதாக உருவான மெண்டே பிரான்ஸ் அமைச்சர் குழுவிற்கு, கம்யூனிஸ்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட, தங்கள் ஆதரவைக் காட்டிக்கொள்ள வலிய முன்வந்தனர். அவர்கள் ஆதரவை மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ள மெண்டே பிரான்ஸ் மறுத்துவிட்டார்.

பிரெஞ்சு பாராளுமன்றத்தில் உள்ள கம்யூனிஸ்டு உறுப்பினர்கள், வலியச் சென்று, புதிய மந்திரி சபையை ஆதரிப்பது என்றால், அதில் ஏதாவது மறைபொருள் இருக்கத்தான் வேண்டும். ஒவ்வொரு நாட்டு கம்யூனிஸ்ட் கட்சியையும் இயக்குவிக்கும் உரிமை கொண்டுள்ள 'கோமின்பாரம்' அமைப்பின் தூண்டுதல் இல்லாமல், பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சி மெண்டே பிரான்ஸ் அமைச்சர் குழுவை ஆதரிக்க முன்வந்திருக்காது என்பது முக்காலும் உண்மை.

'கோமின்பாரம்' அமைப்புக்கும், சோவியத் ரஷ்யாவிற்கும் உள்ள தொடர்பு உலகறிந்த உண்மை. நவசீனத்திற்கும், சோவியத் ரஷ்யாவிற்கும் உள்ள நட்பு, அடிப்படை இலட்சியத்தைப் பொறுத்துள்ளது.

இந்தோ-சீனாவில், பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடந்துவரும் சுதந்திரப் போரில் நவ சீனாவிற்குள்ள அக்கரை, ஒரு ஆசிய நாட்டின் உரிமை கோரிக்கையை ஆதரித்து வரவேற்பது என்ற தோடமட்டுமில்லாமல், தனது எல்லையைப் பாதுகாத்துக் கொள்வது என்பதும் அடங்கி இருக்கிறது.

இந்தோ-சீனாவில் மேலும் போரைத் தொடர்ந்து நடத்தி வருவது என்பது, சுதந்திர வியட்நாம் படைகளால் முடியாத காரியம். போதிய ஆயுத தளவாடங்கள் கிடைக்காத நிலையில், நவீன போர்ச் சாதனங்கள் கிடைக்காத நிலையில், மேற்கொண்டு போரிட முடியாத நிலை வியட்நாமுக்கு ஏற்பட்டு இருப்பதாக ஒருவராலும் சொல்ல முடியாது. பருவ நிலை மாறிவிட்டது. மாறிய பருவநிலை, மேற்கொண்டு போரிடுவதற்கு முட்டுக்கட்டைப் போடுவதாக இருக்கிறது.

ஜெனிவா மாநாடு தோற்றுப் போனால், அதைத் தொடர்ந்து வரும் நிகழ்ச்சி, மிக மிகப் பயங்கரமானதாகவே இருக்கும் என்பது யூகிக்கக்கூடியதே. பிரிட்டன் ஆதரவு காட்டுவதாக தலையசைத்திருந்தாலும், மோதும், அதையே ஒரு வாய்ப்பாகக் கொண்டு, அமெரிக்கா, பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்குத் துணையாக இந்தோ-சீனப் போரில் நேரடியாகக் குதித்திருக்கும். அப்படி நேரடியாக அமெரிக்கா கலந்து கொண்டிருந்தால், அதற்கு வெற்றி ஏற்பட்டு இருக்குமா இல்லையா என்பது வேறு விஷயம். இந்த ஆராய்ச்சிக்கும், பிரஸ்தாப விவகாரத்திற்கும் துளியும் சம்பந்தமில்லை.

அவ்வாறு அமெரிக்கா, பிரிட்டன் கூட்டுறவுடன், பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்குத் துணையாக, இந்தோ-சீனப் போரில் நேரடியாகத் தலையிட்டிருந்தால், மூன்றாவது உலகப் போர், அந்த கணம் தொடங்கி விட்டிருக்கும் என்பது மட்டும் உறுதியிலும் உறுதியாகும்!

பிரிட்டனின் பிடிவாதம், போரில் தலையிடுவதற்கான துணிச்சலைப் பெறவிடாமல், அமெரிக்காவைத் தடுத்து விட்டது.

இந்தோ-சீனாவை அடுத்துள்ள தாய்லாந்து, கொரியாவில் நடைபெற்றது போல, ஐக்கிய நாடு சபை கொடியின் கீழ் வியட்நாம் மீது அமெரிக்கப் போர் தொடுப்பதற்கேற்றதோர் சூழ்நிலையை உண்டாக்கித் தர, முயற்சியைத் தொடங்கியது. அம்முயற்சி முளையிலேயே கிள்ளி எறியப்பட்டது.

ஜெனிவா மாநாடு, ஒரு முடிவும் காணாமல், தோல்வியடையுமேயானால், மூன்றாவது உலகப் போர் நிச்சயம் என்று தெரிந்துவிட்டது!

மெண்டே பிரான்ஸ் தலைமையில் உருவெடுத்துள்ள பிரெஞ்சு அமைச்சர் குழு, இந்தோ-சீனப் போரில் சமாதானம் காணத் தவறிவிட்டால், அதன் பிறகு வர இருக்கிற அமைச்சர் குழு, மூன்றாவது உலகப் போருக்கு அடிகோலும் மந்திரி சபையாகவே இருக்கும் என்ற உண்மையையும், மெண்டே பிரான்ஸ் ஐயத்திற்கிடமின்றி விளக்கிவிட்டார்!

எனவே, இந்தோ-சீனப் போரை, வியட்நாம் விடுதலையை உறுதிப்படுத்துவதோடு, தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

வேறு வகையான அரசியல் சூழ்நிலையும், பருவநிலை மாற்றமும் ஏற்படுகிற வேளையில், மீண்டும் இந்தோ-சீனப் போர் துவக்க இருக்கிறது என்பது எதிர்பார்க்கக்கூடியதே!

கொரியாபோல், இந்தோ-சீனாவும் துண்டாடப்பட இருக்கிறது!

ஜெர்மனி போல், இந்தோ-சீனாவும் பிளக்கப்படப் போகிறது.

இனி நடைபெற இருக்கிற உலக சமாதான மாநாடுகளில் எல்லாம் 'ஜெர்மன் இணைப்பு' என்று இதுவரை பேசப்பட்டது போலவும், 'கொரிய ஒத்துழைப்பு' எனக் கூக்குரல் கிளப்பினது போலவும், 'இந்தோ—சீன ஐக்கியம்' எனும் அழுகுரல் எழக்கூடும்! மாநாடு துவங்கும் காலத்தில், பிரச்னை எந்தக் கட்டத்தில் இருந்ததோ, அதே கட்டத்தில்தான் இருக்கும், மாநாட்டின் இறுதிக் காலத்திலும்!

வல்லரசுகள் கூடும் மாநாடுகள், மேலும் மேலும் புதுப்புது பனிப்போர்ச் சரித்திரத்தை வளர்க்கும் மாநாடுகளாக முடிவதைத்தான், நாம் இதுவரை கண்டுவருகிறோம். மக்கள் பெயர் கூறி, மக்களுக்குரிமையுடைய அதிகாரத்தை, தம் கையில் பற்றிக்கொண்டுள்ள மக்கள் அதிகாரிகள், ஆடிவரும் அரசியல் கூத்து, இத்தகு நிலையில் இருப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை.

வருகிற ஜூலை திங்கள் இருபதாம் தேதிக்குள் இந்தோ-சீனப் போரை நிறுத்தி விடுவேன் எனச் சூளுரைத்து, தமது அமைச்சர் குழுவிற்கு ஆட்சி உரிமை பெற்ற மெண்டே பிரான்ஸ் பெற்றவெற்றி, தற்காலிகமானதே ஒழிய நிரந்தரமானதல்ல. அது நிரந்தரமானதாக இருக்க வேண்டுமானால், தனது ஏகாதிபத்தியவெறியை பிரான்ஸ் உடனடியாக விட்டொழிக்க வேண்டும்.

அப்பொழுதுதான் இந்தோ-சீனாவின் அன்புகலந்த நட்பை பிரான்சு எதிர்பார்க்க முடியும்; இத்துறையில் பிரான்ஸ் பிரிட்டனைப் பின்பற்றி பெருமையடையப் போகிறதா, அல்லது பழைய போக்கிலேயே சென்று, புழுதியில் சாயப்போகிறதா என்பதை காலந்தான் அறிவிக்க வேண்டும்.

சினிமாவினால், மதத்துக்கு ஆபத்து என்ற கூக்குரல் அர்த்தமற்றது!

—(:)—

குழந்தைகள் உள்ளம் பாழாகிறது என்பது தவறு!

அநீதிகளை எடுத்துக் காட்டினால் ஏன் இந்த எதிர்ப்பு?

மகஜர் தயாரித்தோர்க்கு அகர்வாலாவின் அறிவுரை

புதுடில்லி, ஜூன் 28—

"நாட்டிலே வெளியிடப்படுகின்ற திரைப் படங்களால் சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கிற கட்டுப்பாடு குலைந்து போகுமென்றும், மதத்திற்கு ஆபத்து வந்துவிட்டதென்றும் வகுப்புத் துவேஷம் வளர்க்கப்படுகிறதென்றும், இப்போது நமது நாட்டில் கூச்சலிடுகின்றனர்; அதுபோல், சமுதாய அநீதிகளைத் திரைப் படங்கள் எடுத்துக் காட்டும்போது, சமுதாயத்தில் சலுகைகள் பல பெற்று உயர் வாழ்வு வாழ்வோர், அதை மறுத்துப் பேசுகிறார்கள்; அநீதிகளை எடுத்துக்காட்டக் கூடாது என்று தடுக்கின்றனர்,"

—என்று, மத்திய படத் தணிக்கை போர்டின் முன்னாள் தலைவர் சி. எம். அகர்வாலா கூறியிருக்கிறார்.

டில்லியில் வாழ்கின்ற பெண்களில் குறிப்பாகத் தாய்மார்களில் 13,000 பேர் கையெழுத்திட்டு, 'சினிமாவினால் குழந்தைகளின் உள்ளம் பாதிக்கப்படுகிறது; இந்த அழிவைத் தடுக்கவும்; குழந்தைகள் உள்ளத்தில் நச்சுக் கருத்துக்களைப் புகுத்தாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும்,' என்று பண்டித நேருவிடம் சில நாட்களுக்கு முன்பு மகஜர் ஒன்று தரப்பட்டது அல்லவா? அதுபற்றித் தனது கருத்தைக் கூறும்போதுதான் மேற்கண்டவாறு அகர்வாலா கூறினார்.

தோழர் அகர்வாலா மத்திய படத் தணிக்கை போர்டின் முன்னாள் தலைவராகவும், பம்பாய் உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாகவும் பணியாற்றியவர்.

அவர் மேலும் கூறியதாவது:-

"திரைப் படங்கள் மீது குற்றம் சுமத்துவோர் இப்போது மதத்தையும், பழக்க வழக்கங்களையும் ஆதாரம் காட்டுகின்றனர்.

"ஒரு மதத்தினுடைய ஏதாவது ஒரு பகுதியைப் பற்றிக் குறைகூறுவோர் எப்போதும் இருக்கத்தான் செய்கிறார்கள். சமுதாயத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட வகுப்பைப் பற்றி ஒரு படத்தில் ஏதாவது கிண்டலாக, நகைச்சுவைக்காகக் கூறப்பட்டால் உடனே அந்த சமுதாயத்தையே அவமதித்து விட்டதாகப் பலர் கூக்குரலிடுகிறார்கள். இங்கிலாந்து போன்ற நாடுகளில் ஒரு இனத்தவர் மற்ற இனத்தவரைக் கேலி செய்யும் காட்சிகள் வரும்போதெல்லாம், அவற்றை இங்கிலாந்து மக்கள் நகைச்சுவை உள்ளத்துடன் ஏற்றுக் கொள்கின்றனர்."

திரைப் படங்களின் தரம் பற்றி அகர்வாலா குறிப்பிடும் போது, "இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் என்றால் டில்லியின் மகஜர் தந்திருப்போருடைய கருத்து சரியானதாக இருந்திருக்கலாம்; ஆனால், கடந்த இரண்டாண்டுகளாக வசனங்கள் மூலமோ, பாட்டுக்கள் மூலமோ, அல்லது வேறு எந்த முறையிலும், திரைப் படங்களில், ஒழுங்கீனமான பேச்சுக்களோ அநாகரீகப் பண்பாடுகளோ அனுமதிக்கப்படவில்லை," என்றார்.

"மகஜர் தயாரிப்பது கலைமானதாக இருக்கலாம்; ஆனால், வேண்டப்படாத கருத்துக்கள் கொண்ட திரைப் படம் வெளியிடப்பட்டிருக்கிறதா என்று மகஜர் அனுப்பியவர்களுக்கு நான் சவால் விடுகிறேன். அதுமட்டுமல்ல; குழந்தைகளின் மனப்போக்கு கெட்டுப்போகக்கூடாது என்பதற்காக திரைப் படங்களைத் தடை செய்தால் எதுவும் பயன் கிட்டாது. தாய் தந்தையர்களின் வேணுதல், கவனிப்பு, சிறந்த கல்வி இவைகள் மூலமே அந்தப் பலன் கிட்டும். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் மகஜரில் கையொப்பமிட்டவர்களில் பெரும்பாலோர் ஒரு முறைகூட திரைப் படக் காட்சிக்குச் சென்றிருக்கமாட்டார்கள் என்றே நான் நம்புகிறேன்," என்று அவர் மேலும் கூறினார்.

"வெளிநாட்டிலிருந்து வரும் படங்களும் சரியான முறையில் தணிக்கை செய்யப்படுகிறதென்றும், நமது நாட்டில்தான் 1953-ல் வெளியான படங்களில் $12\frac{1}{2}$ சத விகிதம் சர்க்காரின் பரிசுக்குத் தகுதியானவை என்று தீர்மானிக்கப்பட்டது," என்றும் தோழர் அகர்வாலா மேலும் கூறினார்.

கோவில் நகைகள் மதிப்பு

தென்னாட்டில் நாலரை கோடி ரூபாய் பெறும்!

திருச்சி, ஜூன் 28—

தென்னாட்டில் உள்ள 7,800 கோவில்களில் உள்ள நகைகளின் மொத்த மதிப்பு 4 கோடியே 41 லட்ச ரூபாய்களாகும் என்று அதிகாரபூர்வமாய் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

வேலூர் மாநாட்டு தீர்மானங்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கூலியோ கிடைப்பதில்லை. எனவே, பீடித் தொழிலாளருக்கு நிரந்தரமான வேலையும் கூலி உயர்வும் கொடுக்கவேண்டுமென முதலாளிகளுக்கு உத்தரவிட சர்க்காரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

(அ) பேக்டரி முறையில் தொழில் செய்துவந்த தொழிலாளர்களை சிறுகுழுக்களாக பிரித்துவிட்டதினால் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய சட்டப்படி உரிமைகள் பறிக்கப்படுகின்றன. எனவே, பீடி தொழிலாளருக்கு சட்டப்படி இருக்கும் உரிமைகளை பாதுகாக்கவேண்டியது சர்க்காரின் கடமை இதை உணர்ந்து பிரஞ்சுகளாக பிரிக்கப்பட்டிருப்பதை மீண்டும் மண்டிமுறை (பேக்டரி) ஏற்படுத்த சர்க்காரை இம்மாநாடு கோருகிறது.

—தலைவர்

நெய்வேலியில் வடக்கு—தெற்கு

தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள நெய்வேலி நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்களில் வடநாட்டவர்களுக்கு அதிகக் கூலியும், நம் தமிழகத் தொழிலாளர்களுக்குக் குறைவான கூலியும் கொடுக்கும் அநீதியை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன் இதற்குக் காரணமான வடநாட்டு அதிகாரியை உடனே நீக்கி தமிழ் நாட்டைச் சேர்ந்தவரையே அச்சுரங்க நிர்வாக அதிகாரியாக நியமிக்க வேண்டும் என்று சர்க்காரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

—தலைவர்

ஆரம்ப ஆசிரியர் ஊதியம்

சென்னை மாநிலத்திலுள்ள ஆரம்ப ஆசிரியர்களுக்கு சம்பளம் உயர்வு அளிக்க வேண்டுமென்பதுடன், எல்லோருக்கும் ஒரே விதமான சம்பள விகிதம் நிர்ணயிக்க வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

—தலைவர்.

வேலூர் தி. மு. கழக மாநாடுகள்

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

26, 27—6—54-ந் தேதிகளில், வேலூரில் வட ஆற்காடு மாவட்ட தி. மு கழக இரண்டாவது சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள் முறையே திரு. ஈழத்து அடிகள் தலைமையிலும், தோழர் கே. ஏ. மதியழகன் தலைமையிலும் நடைபெற்றபோது, இரண்டாம் நாள் அரசியல் மாநாட்டின்போது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது :—

அனுதாபங்கள்

கல்லக்குடி அறப் போரில் ஈடுபட்டு, அடக்கு முறைக்கு ஆளாகி, சிறை சென்று மீண்ட மணப்பாறை தி. மு. கழக செயல் வீரரும் ஆலைத் தொழிலாளருமான தோழர் குமாரவேல் அவர்கள் இயற்கை எய்தியது குறித்து இம்மாநாடு மிக வருத்தமுடன், அம்மாவீரனுக்கு இறுதி வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு அவரது குடும்பத்தாருக்கும் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

* * *

வ. ஆ. மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக செயல் வீரர்களான வேலூர் முத்து, கரு கம்பத்தூர் சீனிவாசன் ஆகியோரின் மறைவுக்கு இம்மாநாடு மிகவும் வருத்தமுடன் அவர்களது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

—தலைவர்

நஷ்ட ஈடு

கல்லக்குடி-டால்மியாபுரம் அறப் போரில் ஈடுபட்டு ஆச்சாரியாரின் அடக்குமுறை காரணமாக துப்பாக்கி வேட்டுக்கு இரையாகி உயிர் நீத்த உத்தமர்களுக்கு இம்மாநாடு தனது வீர வணக்கத்தைச் செலுத்துவதுடன், அங்ஙனர்களான நமது அருமைத் தோழர்களுக்கு அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு உயிர் நீத்த வீரர்களின் குடும்பத்திற்கும் அங்கமிழந்த தோழர்களுக்கும் அரசியலார் நஷ்ட ஈடு தரவேண்டுமென இம்மாநாடு அரசியலாரைக் கேட்டுக் கொள்கிறது.

—தலைவர்

புகைவண்டி நிலையப் பெயர் மாற்றம்

வடநாட்டு ஆதிக்க சுரண்டல் தன்மைகளின் எடுத்துக்காட்டுகளில் ஒன்றாகிய டால்மியாபுரம் என்ற மாசைத் துடைத்து—கன்னித் தமிழ்ப் பெயரான கல்லக்குடி என்று இட்டிருப்பதை டெல்லி அரசாங்கம் உத்யோகப் பூர்வமாக ஏற்று அறிவிப்பு செய்ய, சென்னை அரசியலார் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது

—என். எஸ். இளங்கோ

—ஆர்பூர்பி ராமலிங்கம்

வழக்கில் தாமதம்

நேரு பண்டிதரின் போக்கை கண்டித்து சென்ற ஆண்டில் தி மு. க. செயற்குழுவின் முடிவிற்கிணங்க நம் மாவட்டத்தில் நடைபெற்ற ரயில் நிறுத்தப் போராட்டத்தில் இறங்கிய கரு கம்பத்தூர், தொரப்பாடி, ஆற்காடு ஆகிய ஊர்களிலுள்ள 30 - தோழர்கள்மீது இன்னும் வழக்கு இருந்து வருகிறது. இதுவரை 28 வாய்தா போடப்பட்டும் தீர்ப்பாகாதது நீதியின் மதிப்பை குறைப்பதோடு சர்க்காரின் பிற்போக்கை எடுத்துக் காட்டுகிறது என்பதை நினைவூட்டுவதுடன், மேற்படி வழக்கை வாபஸ் பெறுமாறும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

—எம். கண்ணப்பன்

—என். ஏ. ரசீத்

வாபஸ் வாங்குக

கண்ணியம், கட்டுப்பாடு, ஒழுங்கு முறை, அரசியல் நெறி ஆகிய நற்பண்புகளை மேற்கொண்டு அறப்போரில் ஈடுபட்ட ஆத்தூர்குடி, கல்லக்குடி கழக முன்னணி வீரர்கள்மீது மாசு கற்பிக்கும் வகையில் தொடுக்கப்பட்டுள்ள சதி வழக்குகளை உடனே வாபஸ் பெறுமாறு சென்ற அரசியலாரையும் குறிப்பாக முதலமைச்சர் காமராசர் அவர்களையும் இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

—தில்லை வில்லாளன்

—கே. எம். கண்ணபிரான்

கடன் வசூலைத் தள்ளி வைக்க

உரம், விதை வாங்கவும், பம்பு செட்டுக்காகவும் விவசாயிகளுக்கு அரசாங்கம் கொடுத்திருந்த கடனை இந்த ஆண்டில் கட்டவேண்டும் என்று உத்திரவு பிறப்பித்தும் சில கிராமங்களில் வசூலிக்கவும் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. கடந்த 6, 7 ஆண்டுகளாக பருவ மழையின்றி கடந்த ஆண்டு சிறிது மழை பெய்ததெனினும், பயிர் பூராவும் பூச்சிகளால் பாதிக்கப்பட்டு, விவசாய பயிருக்கென செய்த செலவில் நாலில் ஒரு பங்கு பலன் கூட காணமுடியாத இந்த நிலையில்—வாங்கிய கடனை உடன் தர முடியாத நிலையாயிருப்பதால் விவசாயிகளுக்கு கொடுத்திருக்கும் பூரா கடன்களையும் அடுத்த ஆண்டு கழித்து வசூலித்துக் கொள்ளவும்—பல தவணைகளில் வசூலிக்கவும் என இம்மாநாடு தீர்மானிக்கிறது.

—சி எ. வரதராசன்

—க. நெடுஞ்சேரலன்

உழுபவருக்கே நிலம் சொந்தம்

திராவிடத்தின் உயிர்நாடித் தொழிலான விவசாயத் தொழிலாளர்களின் நிரந்தர நல்வாழ்வுக்கான வகையில், உழுபவருக்கே நிலம் உரிமை என்ற அடிப்படையில் கோயில் நிலங்கள் உள்பட நிலப் பிரபுக்களுக்கு உரிமையாக்கி வைக்கப்பட்டிருக்கும் எல்லா நிலங்களையும் அந்தந்த மாவட்டங்களின் அளப்பதற்கேற்ப சமப் பங்கீட்டைச் செய்து விவசாயத் தொழிலாளரின் குறைகளைத் தீர்க்குமாறு சென்னை மாநில சர்க்காரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

• • •

களம்பூர் போராட்டம்

(அ) வ ஆற்காடு களம்பூரில் நடைபெறும் விவசாயப்போராட்டத்தை இம்மாநாடு வரவேற்பதுடன் அரசியலாரும், அங்குள்ள நிலப் பிரபுக்களும் கழகத் தோழர்களுக்கு அனுவசியமாக தரும் தொல்லையை வன்மையாகக் கண்டிப்பதுடன், அவ்விடமுள்ள போலீஸ் படையையும் விவசாய வழக்குகளையும் வாபஸ் பெறுமாறு இம்மாநாடு அரசியலாரைக் கேட்டுக் கொள்கிறது இல்லையேல் தி மு கழகம் இது குறித்து நேரடி நடவடிக்கைகளில் இறங்க வேண்டியிருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறது.

(ஆ) 21-9-53 — 9-12-53 ஆகிய தேதிகளில் மாவட்ட கலெக்டர் அவர்களால் விவசாயிகளுக்கும் — மிலச்சுவான்தார்களுக்கும் இடையே செய்து வைத்த உடன்பாட்டை விரைவில் அமுலாக்கப்பட வேண்டுமென்றும் இதற்கு மாறாக நடக்கும் மிலச்சுவான்தாரர்கள்மீது நடவடிக்கை எடுக்குமாறும் அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

—எம். என். சிவசாமி

—என். எம். அண்ணாமலை

பாராட்டு

முன்னாள் முதலமைச்சர் தோழர் ஆச்சாரியார் அவர்களால் கொண்டுவரப்பட்ட குலத் தொழில் கல்வி முறையை, இன்றைய முதலமைச்சர் தோழர் காமராசர் அவர்கள், ஜனநாயகப் பண்பையும், மக்களின் மகத்தான சக்தியையும் மதித்து, அதற்கிணங்க அத்தீய திட்டத்தை ஒழித்தமை குறித்து முதலமைச்சர் காமராசர் அவர்களை இம்மாநாடு பாராட்டுகிறது

—டி. சண்முகம், எம். எல். ஏ,

—சி. வி. ராசகோபால்

பழைய வாக்களிப்பு முறையே தேவை

நாட்டிலே கல்வி அறிவு பெறுதவர்கள் ஏராளமாகயிருக்கும் இன்றைய நிலையில், மாவட்ட ஆட்சி மன்ற (ஜில்லா போர்டு) தேர்தலிலே வோட் அளிப்பதில் புதிய முறையைப் புகுத்துவது வோட்டர்களிடையே வீண்குழப்பத்தை உண்டாக்குமென்பதோடு இதனால் ஜனநாயக உரிமையே சிதைவுறும் என இம்மாநாடு கருதுவதுடன், புதிய முறையைக் கைவிடுமாறு அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

—ஏ. கோவிந்தசாமி, எம்.எல் ஏ.,

—குமாரமங்கலம்கிருஷ்ணமூர்த்தி

பாலாற்றில் நீர் வர!

வட ஆற்காடு மாவட்டத்தின் மத்தியில் மேற்கு—கிழக்காக பரந்த அளவில் ஓடும் பாலாற்றில் ஒரு சிறிதும் தண்ணீர் இல்லாமையால் இந்த மாவட்டத்தில் ஏராளமான விவசாயத்திற்கு லாயக்கான நிலங்களை சாகுபடி செய்ய முடியாமல் தவிக்கும் விவசாயிகளின் கஷ்டங்களைப் போக்க சென்னை அரசும், மைசூர் அரசும் ஒன்றுகூடி பேசி பாலாற்றில் போதுமான தண்ணீர் விடுமாறு சென்னை மாநில அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது

—வி. முனுசாமி

—திருப்பத்தூர் ராகவலு எம்.எல்.ஏ

வகுப்புவாரி உரிமை

பிற்படுத்தப்பட்ட—தாழ்த்தப்பட்ட, பொதுவாக திராவிட சமுதாயத்தின் உரிமைக்கு ஆவன செய்துவந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையை மீண்டும் செயல் முறைக்குக் கொண்டுவர, இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர சென்னை அரசியலார் முன்வர வேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

—அ பொன்னம்பலனார்

—முரசை பாண்டியன்

சுயமரியாதை திருமணம் செல்லுபடியாக!

இதுவரை நடைபெற்றதும்—இனி நடக்கப்போவதுமான சுயமரியாதைத் திருமணங்கள் அனைத்தையும் சட்ட பூர்வமாக அங்கீகரிக்க ஆவன செய்ய வேண்டுமென சென்னை அரசியலாரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

* * *

ஜாதி பேதாபேதங்களை ஒழித்து மனித சமுதாயத்திலே மலிந்துள்ள ஏற்றத் தாழ்வுகளை ஒழுங்கு பெறச் செய்யும் சீரிய கொள்கை வெற்றி பெறச் செய்யும் வகையில், விதவை மணம், கலப்பு மணம் புரிந்துகொள்பவர்களுக்கு அரசாங்க உத்யோகங்களில் தனிச் சலுகை காட்டும் சட்டத்தை நிறைவேற்றுமாறு சென்னை அரசியலாரை குறிப்பாக முதலமைச்சர் காமராசர் அவர்களை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

—சி வி எம். அண்ணாமலை

—போளூர் சுப்ரமணியம்

தமிழ் ஆட்சிமொழி

தமிழ் மொழியை சென்னை மாநிலத்தின் ஆட்சிமொழியாக செயல்முறையில் கொண்டுவருவதற்கு, சென்னை அரசியலாரும், சட்ட மன்ற உறுப்பினர்களும் உடனடியாக ஆவன செய்ய முனைய வேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

—விருத்தாசலம் முனுசாமி

—அத்துக்குடி ரத்தினம்

ஒப்புதல்

ராஜ்யப் புனரமைப்புக் குழுவினரிடம் தி. மு கழக தலைமை நிலைய சார்பில் தந்த அறிக்கையை இம்மாநாடு மனமார வரவேற்கிறது—ஆதரிக்கிறது.

—தில்லை வடிவேலு.

—எம். பி. சாரதி, எம். பி

என். ஜி. ஓ. ஊழியர் ஊதியம்

பதிவு செய்யப்படாத சர்க்கார் அலுவலாளர்கள் — அதாவது என். ஜி ஓ-க்களின் குறைபாடுகளைத் தீர்க்க சென்னை மாநில அரசியலார் ஆவன செய்ய வேண்டுமென்பதுடன், குறிப்பாக அவர்களுக்குச் சம்பள உயர்வு தரப்பட வேண்டுமென்றும் இம்மாநாடு அரசியலாரை கேட்டுக்கொள்கிறது.

—தோழியர் பூங்கோதை.

—வி ஆர். ஆதிமூலம்.

பிரெஞ்சிந்திய விடுதலை

உலகெங்கும் உரிமை வேட்கை வளர்ந்து வரும் இக்காலில், உலகிற்கே புரட்சிப் பாதையை முதலாவதாக அமைத்துக் கொடுத்த பிரெஞ்சு அரசு, திராவிடத்தின் முக்கிய பகுதிகளான புதுவை, காரை விடுதலைப் போராட்ட வீரர்கள் மீது அடக்குமுறையை ஏவிவிட்டிருப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், புதுவை அறப்போரில் ஈடுபட்டு பிரெஞ்சு ஏகாதிபத்திய அடக்குமுறை கொடுமைகளுக்கு ஆளாகியுள்ள தி. மு கழக வீரர்களை இம்மாநாடு பாராட்டுகிறது.

—சத்தியவாணிமுத்து

—அருண்மொழி, பி ஓ எல்

திராவிட எழுத்தாளர் மன்றம்

திராவிட இயக்கக் கருத்துக்களை மேலும் சிறந்த முறையில் ஏடுகளில் மலரச் செய்யும் வகையில், திராவிட எழுத்தாளர் சங்கம் என்ற அமைப்பை நிறுவ ஆவன செய்யுமாறு கழக பத்திரிகாசிரியர்களையும், திராவிட எழுத்தாளர்களையும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

—கண்ணதாசன்.

—ஏ. எல். சி. கிருஷ்ணசாமி.

இலங்கை தமிழர்

இலங்கையில் அவதியுறும் திராவிடர்களுக்கு டில்லி ஆட்சி பீடம் இதுவரை யாதொரு கவலையும் எடுத்துக்கொள்ளவில்லை யென்பதை திராவிட முன்னேற்றக் கழகம் சுறிவுறுத்திவிருந்தும், அதற்கு மாறாக இலங்கை அரசியலாரோடு டெல்லி முதலமைச்சர் நேரு பண்டிதர் செய்துகொண்ட ஒப்பந்தத்தால், இலங்கையில் உள்ள தமிழர்கள் கொடுமைக்கு ஆளாகியிருப்பதைக் கண்டு இம்மாநாடு மிகவும் வருந்துகிறது. டெல்லி ஆட்சியினரின் வஞ்சனையையும், இலங்கை அரசியலாரின் கொடுமையையும் இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், உடனடியாக இப்பிரச்னை குறித்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமாறு சென்னை அரசியலாரை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது

(ஆ) இலங்கையில் வாழும் நம் திராவிடர்களுக்கு உதவி புரியும் வகையிலும் இலங்கை சர்க்காருக்கும் சிங்கள மக்களுக்கும் நல்லெண்ணத்தை வளர்க்க—திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் நல்லெண்ண தூதுக் குழு ஒன்று இலங்கை சென்று நிலைமையை நேரில் அறிந்து, கூடுமானால் இலங்கை அரசியலாரைச் சந்தித்து ஒரு சமரச முடிவு காணுமாறு பொதுச்செயலாளரையும், பொதுக் குழுவையும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

—என். வி. நடராசன்.

—இரா. சு. தங்கப்பழம்.

சித்தூர் பிரச்னை

தமிழகத்தோடு இணைந்திருந்து — இடைக்காலத்திலே பிரிக்கப்பட்ட சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பகுதிகள் அனைத்தும் தமிழகத்துடன் மீண்டும் இணைக்கப்பட வேண்டும் என்பதை திட்டவட்டமாகவும் நேர்மையுடனும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பீடத்திலுள்ளவர்களுக்கும், ஆந்திர நாட்டு அரசியலாருக்கும் எடுத்துக் காட்டியிருப்பதை மீண்டும் நினைவூட்டுவதுடன், இத்திட்டம் செயல்முறையில் கொண்டு வரப்படுவதற்கு, அண்மையில் நடைபெற்ற திருச்சி பொதுக் குழுவில் தோழர் என். வி நடராசன் அவர்கள் தலைமையில் நிறுவப்பட்டுள்ள இணைப்புக் குழுவை இம்மாநாடு மிகவும் வரவேற்பதுடன் இத்திட்டம் வெற்றிபெறும் வகையில் எல்லா வகையான ஒத்துழைப்பையும் தர வ. ஆ. மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருக்கிறது என்பதை, பொதுச் செயலாளர் அண்ணா அவர்களுக்கு இம்மாநாடு பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறது.

—இரா. நெடுஞ்செழியன்.

—ஏ. கோவிந்தசாமி.

நெசவாளர் வாழ்வு பெற!

திராவிடத்தின் முக்கியதொழிலான நெசவுத் தொழிலும் — அத்தொழிலாளர்களின் நிலையும் வர வர சீரழிந்து கொண்டு போவதால், அத்தொழிலாளர்களுக்கு ஆவனசெய்ய ஏற்கனவே பல மாநாடுகளில் தி. மு. கழகம் எடுத்துக் கூறியுள்ள திட்டத்தை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வருமாறு அரசியலாரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது. —தலைவர்

தங்கம்

வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்தில் கிழக்கு தொடர்ச்சி மலையைச் சார்ந்த குன்றில் 15 ஆண்டுகளுக்கு முன் அங்கு தங்கம் இருப்பதாக அரசியலாரால் பரிசீலனை செய்யப்பட்டது. எனினும் தொடர்ந்து அது குறித்து அரசியலார் கவலை செலுத்தாமை கண்டு இம்மாநாடு வருந்துவதுடன், உடனடியாக அங்குள்ள தங்கத்தைத் தோண்டி எடுப்பதற்கு அரசியலார் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வதுடன், இதன் மூலமாக வேலையில்லா தொழிலாளர்களின் அவல நிலையை ஓரளவாவது தீர்க்கமுடியும் என்பதையும் அரசியலாருக்கு இம்மாநாடு எடுத்துக் காட்டுகிறது. —தலைவர்

ஒருகட்ட விற்பனை வரி

ஆச்சாரியாரால் கொண்டுவரப்பட்ட விற்பனை வரி, வியாபாரிகளையும் பொது மக்களையும் பாதிக்கும் வகையில் அதன் தொல்லை வளர்ந்து வருவதால் பலகட்ட விற்பனையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு ஒருமுனை வரியை மட்டும் வசூலிக்கவேண்டுமென்று இம்மாநாடு அரசியலாரைக் கேட்டுக் கொள்கிறது. —தலைவர்

பீடித் தொழில்

வட ஆற்காடு மாவட்டத்தில் பெரும் பகுதி மக்கள் ஈடுபடும் தொழில் பீடி தொழிலாகும். அந்தத் தொழில் செய்யும் தொழிலாளருக்கு எந்தவிதமான வசதியும் கிடைப்பதில்லை. போதிய வேலையோ அதற்கேற்ற

(8-ம் பக்கம் பார்க்க)

வேலூர் மாநாட்டில் அண்ணா பேச்சு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தகு தியாகமும் செய்யத் துணிந்தவர்கள் என்பதை நாடறியும்—இதில் யாருக்கும் சந்தேகமில்லை.

முன்பெல்லாம், நாட்டிலே சிலர், 'நாமாவது—போராட்டங்களில் ஈடுபடுவதாவது' என்று கேலி பேசினர்; சிலர், போராட்டத்தில் நாம் ஈடுபடுவது குறித்து அஞ்சினார்கள்; சிலர், 'நாம் போராட்டத்தில் ஈடுபடுவோமா,' என்று சந்தேகப்பட்டனர்.

அவர்கள் எல்லாம் இப்போது நாம் நடத்திய மும்முனைப் போராட்டத்தில் நாம் அனுபவித்த கஷ்டங்களினால் பொது மக்களிடையே நாம் பெற்ற ஆதரவையும், கீர்த்தியையும் கண்ட பிறகாவது தெளிவு பெற்றிருப்பார்கள் என்று நினைக்கிறேன். 'எப்படிக் கிடைத்தது இவர்களுக்கு இந்த போராட்ட ஆற்றல்?'—என எண்ணுகின்றனர் சிலர். அவர்களுக்குச் சொல்கிறேன் — கடந்த ஜூலை 13-ந் தேதியன்று தி. மு. கழகச் செயற்குழு, 'தோழர் சம்பத், 14-ந் தேதி காலை மறியலில் ஈடுபடுவார்,' என்ற தீர்மானத்தை எழுதி முடிப்பதற்குள் நாங்கள் ஐவரும் கைது செய்யப்பட்டோம். தோழர் கருணாநிதி, 15-ல் கல்லக்குடிப் போரில் ஈடுபடுவார் எனவும் தீர்மானித்தோம்.

நாங்கள் கைது செய்யப்பட்டு விட்டதாலேயே போராட்டங்கள் நடைபெறுமல் போகவில்லையே! காங்கிரசாரும் கம்யூனிஸ்டுகளும் எண்ணிப்பார்க்க வேண்டும்—தி. மு. கழகத்திற்கு நல்லதோர் அடிப்படை இல்லாமலிருந்திருந்தால், நாங்கள் கைது செய்யப்பட்டவுடனேயே போராட்டங்கள் பிசுபிசுத்திருக்க வேண்டுமே! போராட்டத்தில் ஈடுபட்ட நேரத்தில்—தோழர்கள், தடிகொண்டு தாக்கப்பட்ட நேரத்தில் தளர்ந்து விடவில்லை. துப்பாக்கியை நீட்டினார்கள்—ஓடி ஒளிந்து கொள்ளவில்லை! சிறை என்றார்கள்—சிரித்த முகத்தோடு ஏற்றுக் கொண்டனர்!! அபராதம், சொத்து பறிமுதல் என்றனர்—மலைத்து விடவில்லை!! நாங்கள் இல்லாதபோதே போராட்டங்கள் இத்தனை வெற்றிகரமாக நடந்தன என்றால், கழகத்தின் அடிப்படையை, மாற்றார் எண்ணிப் பார்க்க வேண்டாமா?

இத்தனை அடக்குமுறைகளையும் அனுபவித்த பிறகும் தோழர்கள் கேள்வி கேட்கின்றனர்—எங்கே போராட்டம் என்று! நான் நினைத்தேன்—வைத்தியக்காரன் — தோழர்கள் ஆறு மாதமாவது ஓய்வு தருமாறு தோழர்கள் கேட்பார்கள் என்று!

தருகிறேன் தோழர்களே போராட்டம் தருகிறேன்! ஆனால், நாம் இன்றுள்ள நிலையையும் எண்ணிப் பார்க்க வேண்டாமா?

இன்று காமராசர் ஆட்சிப் பீடத்திலிருக்கிறார்; ஆனால், அவர் நம்மை—நமது கொள்கையை ஆதரிப்பார் என்று வைத்தியக்காரத்தனமாக எண்ணமாட்டேன்.

'நான் மறந்துவிடவில்லை தோழர்களே! — இதே கனம் காமராசர்தான், 'கழகத் தோழர்களின் கட்டை விரலை வெட்டிவிட வேண்டும்.'— என்று பேசியவர் என்பதை!''

'தினத் தந்தி'யார் நாம் ஏதாவது போர் செய்து கொண்டே இருக்க வேண்டும் என எண்ணுகிறார் போலும்! ஏனெனில், அவருக்குப் போரும் தெரியாது; களமும் கிடைக்கவில்லை—அந்த காரணத்தால் போலும்! அவர் அறிய வேண்டும்—மெது தி. மு. கழகப் பட்டாளம், கூலிப் பட்டாளமுமல்ல; ஏவல் பட்டாளமும் அல்ல என்பதை!

காமராசர் கல்வித் திட்டத்தை எடுத்தார் என்பதற்காகப் பாராட்டுகிறோம் என பழைதைத் தவிர, அவர், ராமசாமியாரை மந்திரியாக்கிக் கொண்டதை ஆதரிக்கிறோம்; வரவேற்கிறோம் என்பதல்ல—மாறாகக் கண்டிக்கிறோம்!

அதேபோல, அவர் தேர்தலில் நிற்பதற்காக, தனது சொந்தத் தொகுதியான விருதுநகர் தொகுதியை விட்டு, குடியாத்தம் தொகுதியைத் தேர்ந்தெடுத்ததையும், 'அரசியல் நேர்மை அல்ல,' என்றும் அவருக்கு சுட்டிக் காட்டுகிறோம்.

குடியாத்தம் தொகுதியில் காமராசரை எதிர்த்து ஒரு கம்யூனிஸ்டு தோழரும், கோவிந்தராசன் என்ற தோழரும் சுயேச்சையாகவும் போட்டியிடுகின்றனர் என்று அறிகிறோம்.

தோழர் கோவிந்தராசன் என்னை சந்தித்து, 'தனக்கு தி. மு. கழகத்தின் ஆதரவு தேவை,' எனக் கேட்டார். நான் அவரை விசாரித்த பொழுது, அவர் ஒரு திராவிட கழகத் தோழர் என்றும் தேர்தலுக்காக, சமீபத்தில் கழகத்திலிருந்து ராஜிநாமா செய்துவிட்டதாகவும் சொன்னார்.

அவருக்குச் சொன்னேன் —''முதலில் தங்கள் பெரியார் ராமசாமியிடம் போய் அனுமதி பெற்று வாருங்கள்; பெரியார் அவர்கள், உங்களை ஆதரிப்பதாக 'விடுதலை'யில் ஒரு தலையங்கம் எழுதினால், நான் மூன்று தலையங்கம் எழுதுகிறேன்; அவர் உங்கள் தொகுதிக்கு ஒரு முறை வந்தால், நான் மூன்று முறை வருகிறேன்'' என்பதாக! 'சாமியிடம் வரம் பெற்றும், பூசாரி, தானாகவே வரம் தருவான்,'' என்று குறிப்பிட்டேன்.

பெரியார் அவர்கள், காமராசர் மந்திரி சபையை ஆதரித்து தீர்மானமே போட்டிருப்பதால் காமராசருக்கு எதிர்ப்பு இருக்கக் கூடாதென எண்ணக்கூடும். ஆதலால் பெரியார் அவர்கள் தேர்தல் பற்றி ஏதும் பேசாதிருந்துவிட்டால், நாமும் எல்லாம் 'குருநாதர் வழிப்படி' என்றிருப்பதைத் தவிர வேறு வழியில்லை!

நமது அடிப்புள்ள தம்பிகளுக்கு பிடிக்கவில்லை, இந்த போக்கு! அவர்களுக்குச் சொல்கிறேன்—'கற்ற பாடத்தையும், கற்றுத் தந்த குருவையும் மறப்பது நல்லதல்ல,'—என்று!

இந்த உபதேசர்களுக்கு மட்டுமல்ல — பொதுத் தேர்தல்களிலேயே நாம் நேரிடையாகக் கலந்து கொள்வது பற்றி, ஏற்கனவேயே பெரியார் அவர்களுக்கு அனுமதி கோரி வேண்டுகோள் ஒன்று தந்துள்ளேன்.

பெரியார் அவர்களுக்கு காங்கிரஸ் பிடிக்கவில்லை; கம்யூனிஸ்டுகளும் அப்படியே; பின் யார்தான் அவரின் அன்பிற்கும் பாத்திரமானவர்களாயிருக்க முடியும்—தனியர்கள் எனை நம்மைத் தவிர!

நாம், பொதுத் தேர்தலால் இரண்டு நன்மைகளை உடனடியாகப் பெற முடியும்—ஒன்று, நமது திரண்ட ஆதரவையும், ஆற்றலையும் யாருக்காவது தந்து, பின் அவர்கள் 'பகைப் பாசறைகளாக' மாறுவது மட்டுமின்றி அவசியமற்றமுறையில் தந்துகொண்டிருக்கும் தொல்லைகளையும் தவிர்க்கலாம்; இரண்டாவதாக, வடநாட்டு சர்க்காரைத் தட்டிக் கேட்க முடியும்—நாம் தேர்தலில் போட்டியிட்டு நமது தோழர்கள் சிலர், சட்டசபையிலிருந்தால்!

வடநாட்டைத் தட்டிக் கேட்க, இப்போதுள்ள தராவிட பார்லிமெண்டரி கட்சியாலும் முடியாது; கம்யூனிஸ்டுகளாலும் முடியாது ஏனென்றால், திராவிட பார்லிமெண்டரி கட்சியில், ராமசாமியார் 'கனம்' ஆவதைக் கண்டிப்பவர்களும் இருக்கிறார்கள்—ஆதரிப்பவர்களும் இருக்கிறார்கள் — வேலூர் பழக்கடையில், ஒரு கூடையில் இருக்கும் பலரக மாம்பழங்கள் போன்றவர்கள்! சில பழங்கள் இனிக்கவும் செய்கின்றன; சில காழுகவும் இருக்கின்றன; சில புளிக்கவே செய்கின்றன—அதனால் தான், அவர்களால் முடியாதென்றேன்!

கம்யூனிஸ்டுகளாலும் முடியாது என்றேன்—காரணம், அவர்களுக்கு ஆற்றல் இல்லை என்பதல்ல; 'ஒரு வகை' அனுபவமும் கூடப் பெற்றவர்கள்; இருந்தாலும், முடியாதென்பதற்குக் காரணம், அவர்கள் அகில இந்தியக் கண்ணோட்டக்காரர்கள்! எப்படி வடநாட்டு அரசாங்கத்தைத் தட்டிக் கேட்பார்கள்? ஆகவே, வரும் பொதுத் தேர்தலில் நாமே ஈடுபடுவதுதான் சிறந்தது—அதுதான் வழி என்று நினைக்கிறேன்; என்றாலும், பெரியார் அவர்கள் அனுமதி தர வேண்டாமா?

தேர்தலில் போட்டியிட்டு நாம் ஆட்சி பீடமேறவும்கூட முடியும்; திரு—கொச்சியில் 19 பேர் மட்டும்கொண்ட பி. சோஷலிஸ்டுகள் ஆட்சி பீடமேறவில்லையா, என்ன? அதே போன்ற நிலைகளை நாமும் இங்கு உருவாக்க முடியும். அப்படி ஆட்சிபீடமேறினால் வடநாட்டாசை வினாக நம்மால் எப்படி ஆகும் என்பதை ஏற்கனவே சேலத்தில் அறிவித்தேன்.

ஆகவே, பெரியார் அவர்கள், நமது நலனெண்ணத்தை யோசிக்க வேண்டுமென மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

நாம், நம் இலட்சியத்தை அடைய, பெரியார் அவர்கள் இதைக் கருதுவார்கள் என்றெண்ணுகிறேன். இன்று, பெரியார் அவர்கள் தான் அதற்குத் தடையாக இருக்கிறார்கள்.

கடந்த ஐந்து ஆண்டு காலமாக நாம தனியாக நடந்து வந்திருக்கிறோம்; ஏதேனும் மாசு மரு உண்டா? யாரேனும் கொள்கையைக் கைவிட்டோமா? லட்சியத்தைக் காட்டிக் கொடுத்தோமா? மாற்றார் மனம் பொறாமைப்படுகிற அளவுக்கு, பெரியார் அவர்கள் பெருமைப்படுமளவுக்கு நமது 5 ஆண்டுப் பயணம் சிறப்பாக நடந்திருக்கிறது,

அந்த ராஜபாட்டையை பெரியார் அவர்கள் எண்ணிப் பார்த்து முடிவுகூற வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்,''

செய்திக்கதிர்

ஆதாரக் கல்வி :

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் பூரண ஆதாரக் கல்வி ஆரம்பிக்கப்படுமென்றும், அப்போது ஆதாரக் கல்வி முழு வெற்றியடையுமென்று தான் நம்புவதாகவும் இந்திய சர்க்கார் நிதி அமைச்சர் சி. டி. தேஷ்முக் சேவா கிராம கூட்டமொன்றில் கூறினார்.

★

பரிசுகள் :

சீனப் பிரதமர் இந்தியா வந்திருந்தபோது எடுக்கப்பட்ட படங்களையும், இந்திய சர்க்காரின் டாக்குமெண்டரி திரைப் படங்களையும், இந்தியப் பொருளாதார கலாச்சார சம்பந்தமான பிரசுரங்களையும் பண்டித நேரு சூ-என்-லாயிடம் கொடுத்தார்.

★

அனுதாபம் :

சென்னை நகர சபையில் தனி கட்சி இயல் வல்லுனராகப் பணியாற்றியவரும், சர். பி தியாகராயரின் பேரனுமான பி தியாகராமசாமி அவர்களின் மரணத்திற்கு சென்னை நகரசபை அனுதாபம் தெரிவிக்கும் வகையில் நகர சபையின் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது உறுப்பினர்கள் பலர் பி இராமசாமியின் சேவையைப் பாராட்டிப் பேசினார்கள்.

★

புறப்பாடு

சீனப் பிரதமர் சூ-என்-லாய், திங்கள் அன்று காலை தனது மூன்று நாள் இந்திய சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு இரங்கூன் புறப்பட்டார். விமான நிலையத்தில் பண்டித நேரு அவரை வழியனுப்பினார்.

★

பஸ் போக்குவரத்து துண்டிப்பு

பிரெஞ்சிந்தியப் பகுதிகளில் சத்தியாக்கிரகம் புது முறையில் நடத்தப்படுகிறது. இதனால் புதுவை—இந்திய பஸ் போக்குவரத்து துண்டிக்கப்பட்டு விட்டதென்று தெரிகிறது.

★

ஆட்சேபம்

ஐக்கிய கர்னாடக ராஜ்யத்தில் மைசூரைச் சேர்ப்பதை மைசூர் சட்டசபை உறுப்பினர்கள் குழு ஒன்று ராஜ்யப் புனரமைப்புக் கமிஷனிடம் ஆட்சேபித்துள்ளது மைசூர் அல்லாத மற்ற கன்னட பகுதிகள் சேர்ந்து ஒரு ராஜ்யம் அமைத்துக் கொள்வதில தங்களுக்கு ஆட்சேபம் இல்லையென்று அவர்கள் கூறியுள்ளனர்.

★

உபரி அரிசி

இந்த ஆண்டில் ஆந்திராவில் 5 லட்சம் டன் அரிசி உபரியாக உற்பத்தியாகி இருக்கிறது என்று தெரிகிறது.

வீரமுத்துவுக்கு வாய்ப் பூட்டு!

15 நாள் வரை பேசக்கூடாது என மாஜிஸ்திரேட் கட்டளை!

திருமங்கலம், ஜூன் 24—

விருதி வீரமுத்து தலைமைக் கொண்டு 27—6—54 அன்று பொதுக்கூட்டம் ஒன்றை நடத்த வேண்டுமென்று அனுமதி கோரி உள்ளூர் ஊழியர் காங்கிரஸ் தலைவர் மாலிங்கம் சேர்வை, சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் மனு செய்திருந்தார்.

சப்-மாஜிஸ்திரேட் ஏ இராமசாமி நாயுடு, ஊழியர் காங்கிரஸ் தலைவர், வீரமுத்து, போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆகியோரை சம்மன் செய்து அழைத்து, மகாலிங்கம், போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆகியோரை விசாரித்து கீழ்க் கண்டபடி தீர்ப்பளித்தார்:—

23—6—54 முதல் 15 நாட்களுக்கு திருமங்கலம் ஊழியர் காங்கிரஸ் தலைவர், வீரமுத்துவை அழைத்து கூட்டம் நடத்தக் கூடாதெனவும், மதினைந்து நாட்களுக்கு வீரமுத்து பொதுக் கூட்டத்தில் பேசக் கூடாதெனவும், 144 பிரிவுப்படி தீர்ப்புக் கூறி கோர்ட்டிலேயே உத்தரவையும் சம்பந்தப்பட்டவர்களுக்கு சார்வு செய்யப்பட்டது.

இந்த உத்திரவை எதிர்த்து மேல் நீதிமன்றத்தில் அப்பீல் செய்யப்படும் என்று தெரிகிறது.

பண்டித நேரு சீனா செல்வார்?

இந்திய உபகண்டத்தின் பிரதமர் பண்டித நேரு இந்த ஆண்டில் கம்யூனிஸ்டு சீனாவுக்குச் செல்வார் என்று தெரிகிறது.

இந்தியாவில் உள்நாட்டு நிலையினை ஒட்டி அவரது பிரயாணம் அமைக்கப்படலாம் என்று தெரிகிறது.

சீனாவுக்கு வருமாறு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே பண்டித நேரு கேட்டுக்கொள்ளப்பட்டார் எனது தெரிகிறது.

எம். என். எம். பாவலர் இயற்கை எய்தினார்

''சீர்திருத்தம்'' ஆசிரியரும், நாடகமணியுமான எம். என். எம். பாவலர் சிறிது காட்களாக நோய்வாய்ப்பட்டிருந்து, சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று 19-6-54ல் இயற்கை எய்தினார். அவரது சொந்த ஊரான நெல்லிக்குப்பத்தை அடுத்த மேல்பாதியில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. அவர் பிறப்பு 1901; மறைவு 1954. அவருக்கு மனைவி ஓர் குமாரன், ஓர் குமாரத்தியும் உண்டு.

சென்னை 17-வது வட்ட தி.மு.க. உறுப்பினர்கட்கு

30—6—54 மாலை 6-30 மணியளவில் ஓர் அவசரக் கூட்டம் கழக பணிமனை (17, மாணிக்கச் செட்டித் தெரு, குளோ)வில் நடைபெறும்.

நான்காம் ஆண்டு விழா

30—6—54 மாலை 6 மணிக்கு சென்னை சர்க்கார் கோச் பில்டிங் பாக்டரி தொழிலாளர் கூட்டுறவு சிக்கன செலைட்டி 4-வது ஆண்டு விழா, கவர்ன்மெண்ட் டிரான்ஸ்போர்ட் சென்ட்ரல் ஒர்க்ஷாப் குரோம்பேட்டையில் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ. அவர்கள் அறிவகம் அச்சகத்தில் அச்சிட்டு (18, ... செட்டித் தெரு, ...) வெளியிட்டது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.